# மாதிரி சபைகளின் சித்திரம்

*கர்த்தருடைய சபையின் பிராந்தியங்கள் எவ்விதம் தொடங்கின என்பதை நடபடிகள் புத்தகம் மட்டும்தான் கூறுகின்றது. முதல் பிராந்திய சபையானது எருசலேமில் தொடங்கியது (அதிகாரம் 2); அப்போஸ்தலர்களும், மற்ற கிறிஸ்தவர்களும் (எருசலேம்) நகரை விட்டு வெளியே சென்ற பொழுது, கர்த்தருடைய சபையின் மற்ற (கூடுதலான) பிராந்தியங்கள் தோன்றின. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் தான் ஒவ்வொரு நகரிலும் சபை நிலைநாட்டப்படக் காரணமாயிருந்தது ("சபையின் வருகை"யில் காணவும்).*

*இந்த முன்மாதிரியின் பாடம் ஒன்று, பின்வந்த எல்லா பிராந்திய சபைகளாலும் மதிக்கப்பட வேண்டிய குறிப்பிடத் தக்க அடையாளப் பண்புகளை வெளிப்படுத்துகின்றது. புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த இக்காலங்களில், பிரசங்கியார்கள் தேவனுடைய வசனத்தை மட்டுமே தங்கள் ஆவியின் பட்டயமாகக் கொண்டு சென்றார்கள் (எபே. 6:17). புதிய பகுதிகளில் சபைகளை நிலைநாட்டுவதற்கு அவர்களிடத்தில் மதசட்ட புத்தகங்களோ, ஜெபப் புத்தகங்களோ, கைப் புத்தகங்களோ, ஞான உபதேசப் புத்தகங்களோ அல்லது சட்டரீதியான வேறு எந்த புத்தகங்களோ இல்லை.*

*இன்றைய நாட்களில் சுவிசேஷ ஊழியத்தில் இந்த முன்மாதிரி பயன்படுத்தப்படுகின்றதா? நடபடிகளில் உள்ள மாதிரி சபைகளை நெருங்கி நோக்குவது பயன் நிறைந்ததாய் இருக்கும்.*

## சுய ஆளுகை

*புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சபைப் பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் மூப்பர்களின் செயல்பாட்டை முதலில் காணுகையில், அவை சுய ஆளுகை அமைப்புடையவைகளாய் இருந்தன. அதிகாரம் 2ன் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏறக்குறையப் பதினெந்து ஆண்டுகள் கழித்துதான் நடபடி*

களில் முதன்முறையாக மூப்பர்களைப் பற்றிக் குறிப்பிடப் படுகின்றது ("தேவனுடைய புதிய அரசில்" காணவும்). அப். 11:28-30ன்-படி அக்காலத்தில், யூதேயாவில் இருந்த வறுமைப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அந்தியோகியாவில் இருந்த சக கிறிஸ்தவர்களால் உபகார உதவி அனுப்பப்பட்டது. அந்தியோகியாவின் உறுப்பினர்கள் பவுலையும் பர்னபாவை யும் தங்களின் செய்தியாளர்களாக அனுப்பினார்கள், பணமானது குறிப்பாக மூப்பர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது. மூப்பர்களே சபையின் பொறுப்பாளர்களாக இருந்தார்கள் என்பது தெளிவு.

மேலும், எந்த ஒரு சபையிலும் அப்போஸ்தலரைத் தவிர ஒரு தீர்க்கதரிசியிருந்ததாக முதலாவது குறிப்பானது இந்த விபரத்தில்தான் உள்ளடக்கப்பட்டுள்ளது (அப். 11:27). இருந்தாலும் சபையின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய இவ்விடத்தில் தான் தேவனால் முதல்முதலாக ஒரு தீர்க்கதரிசி பயன்படுத்தப்பட்டார் என்று இது அர்த்தப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை.

எருசலேமிலோ அல்லது யூதேயாவின் மற்ற இடங்களில் இருந்த சபைகளிலோ மூப்பர்கள் முதன்முதலாய்ச் செயல்படத் தொடங்கியது எப்போது என்பதற்கு வேதாகமம் ஆதாரம் எதையும் தருவதில்லை. எருசலேமின் சபை தொடங்கிய வேளையில் அதை அப்போஸ்தலர்கள் முன்னின்று வழி நடத்தினார்கள், ஏனெனில் விதவைகளின் பராமரிப்பில் அவர்களே வழிநடத்தினார்கள் (அப். 6:1-4). அப்போஸ் தலர்கள் அங்கிருந்ததால் அப்பொழுது மூப்பர்கள் தேவைப் படாதிருந்தது. ஆவியின் ஏவுதல் பெற்ற அவர்களின் முன்னோடித்துவத்தில் சபையானது மலர்ந்தது. இருப்பினும், பின்னாட்களில் அப்போஸ்தலர்கள் வேறு இடங்களில் ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்டிருந்ததால் இச்சூழ்நிலை யானது நிலையானதாய் இருக்கவில்லை. மேலும், ரோமா புரியின் ஆளுகைக்குட்பட்ட உலகின் எல்லாப் பகுதிகளிலும் சுவிசேஷம் பரவிய போது, அப்போஸ்தலர்கள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாமல் போனது; எதிர்கால நூற்றாண்டுகளின் பிராந்திய சபைகளிலும் அப்போஸ்தலர்கள் இருக்கமாட்டார்கள். ஆகையால், தேவன் தமது மக்களை ஆளுகை செய்வதற்கு நிலையான ஏற்பாடு ஒன்றை

*வடிவமைத்தார்.*

*ஆசியா மைனர் பகுதிகள் முழுவதிலும் பவுல் மற்றும் பர்னபா ஆகியோரின் முயற்சிகளினால் நிலைநாட்டப் பட்டிருந்த சபை ஒவ்வொன்றிலும் மூப்பர்களாக நியமிக்கப் பட்ட மனிதர்கள் பற்றி முக்கியமான குறிப்புகள் காணப் படுகின்றது (அப். 14:23). பவுலும் பர்னபாவும் வடக்கு நோக்கிய தங்கள் பயணத்திலிருந்து திரும்பி வருகையில், ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்களை நியமித்தார்கள். மூப்பர்களுக்கான தகுதிகள் விவரிக்கப்படுகையில், அவர் “நூதன சீஷனாய் இருக்கக் கூடாது” (1 தீமோ. 3:6) என்றும் ஒரு தகுதியிருப்பதால், இந்தச் செயல்பாடு பற்றி விமர்சனர்கள் கேள்வியெழுப்புகின்றார்கள். இக்கோனியம், லீஸ்திரா மற்றும் தெர்பை ஆகிய ஊர்களில் இருந்த மனிதர்கள் கிறிஸ்தவர் களாகி ஒரு சில மாதங்களே கடந்திருக்கக் கூடும்; புதிய கிறிஸ்தவர்கள் கூடச் சில வேளைகளில் மூப்பர்களாக நியமிக்கப்பட்டதற்கான ஆதாரமாக சிலர் இதை உரிமை கோருகின்றார்கள்.*

*இது அவ்வாறு நடைபெறவில்லை, ஏனெனில் இந்த வேளையில் மனம்மாற்றம் அடைந்திருந்தவர்கள் அதற்கு முன் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் மோசேயின் பிரமாணத்தைப் பின்பற்றியிருந்தார்கள். அப்போஸ்தலருடைய பிரசங்கத்தின் மூலம் தேவனைப் பற்றி முதல்முதலாய் அறிந்தவர்களைக் காட்டிலும், இவர்களின் ஆவிக்குரிய பக்குவமும், தேவனைப் பின்பற்றுதலும் இவர்களை மேலான இடத்தில் வைத்திருந்தது. இவ்வித பக்குவம் வாய்ந்த எபிரெய மனிதர்களுக்கு இயேசு வின் சுவிசேஷ செய்தியானது அறிவிக்கப்பட்ட பொழுது, புதிய சத்தியங்களை அவர்கள் ஏற்றுக் கொண்ட செயலானது இரட்சிப்பைப் பற்றிய சரியான அறிவுக்கு இவர்களைக் கொண்டு வந்தது. இவர்களின் ஆவிக்குரிய அனுபவமும் பக்குவமும், முன்பு நியாயப்பிரமாணத்தின்படி தேவனை சேவிக்காதவர்களுக்கு முன்னின்று வழிநடத்த இவர்களைத் தகுதிப்படுத்தின.*

*விருத்தசேதனப் பிரச்சனை பற்றிக் கலந்துரையாடுவதற்காக பவுல் எருசலேமுக்கு அனுப்பப்பட்டபோது, மறுபடியும் அவ்விடத்தில் மூப்பர்கள் குறிப்பிடப்பட்டார்கள் (அப். 15:1, 2). மூன்றாவது பயணத்தில் பவுல் மிலேத்துவில்*

மூப்பர்களைச் சந்தித்தது முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றது (அப். 20:17). மூன்றாவது பயணத்தின் முடிவில் பவுல் எருசலேமில் யாக்கோபுவையும் மற்ற மூப்பர்களையும் சந்தித்தார், அப்பொழுது அவர்கள் பவுலினிடத்தில் ஒரு விசேஷித்த வேண்டுகோள் விடுத்தார்கள் (அப். 21:17-26). எனவே, ஒவ்வொரு சபையிலும் மனிதர்கள் முன்னோடிகளாய் நின்று வழிநடத்த ஆவிக்குரிய பக்குவத்தையும், மூப்பரின் அலுவல்களைக் கவனிக்கத் தகுதியும் அடையும் பொழுதெல்லாம் அவர்கள் மூப்பர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சபைக்கான அவரது நிரந்தரமான வடிவமைப்பாகும்.

நடபடிகளில் காணப்படுகின்ற சபைகள் சுயாதீனமுள்ள வைகளாகச் செயல்பட்டன. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் அதற்கேயுரிய மூப்பர்கள் இருந்தார்கள் (அப். 14:23). பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதிய நிருப மானது விசேஷமாக "மூப்பர்களுக்கும் உதவிக்காரர்களுக்கும்" (பிலி. 1:1) எழுதப்பட்டது. எபேசுவின் மூப்பர்கள் தங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படியும், அவர்களில் "இருந்தே" எழும்பக் கூடியவர்களைப் (போதனையில்) போஷிக்கும்படி கவனமாயிருக்கும்படியும் கூறப்பட்டார்கள் (அப். 20:28).

கொரிந்து சபையில் விபசாரக்காரனால் எழுந்த பிரச்ச னையை அவர்களே ஒழுங்கு படுத்திக் கொள்ளும்படி கூறப்பட்டதில் சுயாதீனமுள்ள இன்னுமொரு செயல்பாடு காணப்படுகின்றது (1 கொரி. 5). கொரிந்துவில் இருந்த சபையானது எருசலேமுக்கோ அல்லது வேறு எந்த பிராந்திய சபைக்குமோ முறையிடத் தேவையில்லாதிருந்தது; உறுப்பினர் கள் தங்களின் சொந்த பிரச்சனைகளைக் கையாளுவதில் சுயாதீனமாய்ச் செயல்பட முடிந்தது.

பிராந்திய சபைகள் கூட்டுறவான முறையிலும் செயல் பட்டன. உதாரணமாக, அந்தியோகியாவில் இருந்த யூதேயா வுக்கு உதவி அனுப்பப்பட்டது (அப். 11:28-30). பவுல் தெசலோனிக்கேயில் பிரசங்கிக்கையில், வேறொரு சபையானது அவரின் தேவைகளைப் பூர்த்தி செய்தது (பிலி. 4:15). யூதேயா வில் இருந்த வறுமைப்பட்டவர்களுக்கு உதவும் மாபெரும் முயற்சியில், பணத்தை அனுப்ப "செய்தியாளர்களை" தேர்ந் தெடுப்பதில் சபைகள் கூட்டுறவுடன் செயல்பட்டன

*(2 கொரி. 8:19-23).*

*முடிவை எடுப்பதற்குச் சபைகள் எவ்வழியிலும் அல்லது எவ்வேளையிலும் பிணைந்து செயல்பட்டதற்கான ஆதாரம் எதையும் வேதவசனப் பகுதியானது கொடுக்கவில்லை. அவர்கள் ஆலோசனை பெறுவதற்கு சங்கங்களோ, டயோசிஸ் களோ, அல்லது தலைமையகங்களோ கொண்டிருக்கவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதரி சபைகளாக ஒத்துழைத் தார்கள். அவர்கள் ஒரே வகையான உபதேசங்களை விசு வாசித்து, நடைமுறைப்படுத்தினார்கள், அவர்கள் ஒரே வகையாக ஆராதித்தார்கள். ஏனெனில் அவர்கள் ஒரே விதமான சுவிசேஷத்தையே போதித்தார்கள். சுவிசேஷத்தை விதை என்று விவரிக்கும் இயேசுவின் உருவகக் கூற்றைப் பயன்படுத்துவதென்றால் (லூக். 8:4-15), அவர்கள் ஒரே விதமான விதையை விதைத்தார்கள், ஆகையால் ஒரே விதமான பயிரையே அறுத்தார்கள்.*

*நடபடிகளில் காணப்படும் சபைகள் சுயாதீனமுள்ளவை களாக, சுய ஆளுகை அமைப்பை உடையவைகளாக ஆனால் கூட்டுறவுள்ளவைகளாக இருந்தன.*

## சுயமான செய்தி பரப்புதல்

*சுவிசேஷமானது எருசலேமில் இருந்து அந்தியோகியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (அப். 11:19-26). இந்தப் புதிய குழுவுக்கு உதவுவதற்கு எருசலேம் (சபையானது) பர்னபாவை அனுப்பி வைத்தது (வ. 22-24), அங்கு தம்முடன் ஊழியம் செய்ய பர்னபா பவுலை அழைப்பித்தார் (வ. 25, 26). அங்கு அவர்கள் "அநேக ஜனங்களுக்கு" போதிக்க முடிந்தது (வ. 26).*

*பின்னாளில், பர்னபாவும் பவுலும் அந்தியோகியாவில் இருந்து மற்ற நகரங்களுக்குச் சுவிசேஷ ஊழியம் செய்ய அனுப்பப்பட்டார்கள் (அப். 13:1-3). முதலாம் பயணத்தின் முடிவில் பவுல் அந்தியோகியாவுக்கு வந்து, என்ன செய்யப் பட்டிருந்தது என்பது பற்றி சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தார் (அப். 14:26, 27). அடுத்தடுத்த பயணங்களின் முடிவிலும் கூட அவர் தொடர்ந்து அந்தியோகியாவி(சபையி)ல் அறிக்கை சமர்ப்பித்தார் (அப். 18:22, 23), எனவே இந்த ஊழியப் பயணங்கள் யாவும் அந்தியோகியா சபையின் ஊழியத்தில் ஒரு*

*பாகமாய் இருந்தன. அவர்கள் மற்ற இடங்களில் சுவிசேஷத்தைப் பரப்ப விரும்பினார்கள்.*

*பவுல் பிலிப்பி நகரில் சபையை நிலைநாட்டினார், அந்தப் பிராந்திய சபையானது அவர் மற்ற இடங்களில் பிரசங்கிக்க அவருக்கு உதவி செய்தது (அப். 16:12-15; பிலி. 4:15-18). பவுல் எபேசுவில் பிரசங்கித்துக் கொண்டிருந்த பொழுது, அந்தக் கிறிஸ்தவக் குழுவினர் ஆசியா மைனர் பகுதி முழுவதிலும் வசனத்தைப் பரப்புவதற்கு உதவினார்கள் (அப். 19:10), கொலோசே நகரில் இருந்த சபையானது ஏவுதல் பெற்ற பவுலின் நிருபங்கள் லவோதிக்கேயாவில் இருந்த சபையில் வாசிக்கப்படும்படி பார்த்துக் கொண்டது (கொலோ. 4:16). மேலும், தெசலோனிக்கேயில் இருந்த சபையிலிருந்து கர்த்தருடைய வசனமானது மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் "தொனித்தது." பவுல், "தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" (1 தெச. 1:7, 8) என்று கூறினார்.*

*சபைகள் நிலைநாட்டப்பட்ட இடங்களிலெல்லாம், புதிய கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்த மற்ற எல்லா இடங்களிலும் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு உதவும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மற்ற நகரங்களிலும் தேசங்களிலும் சபையைப் பரப்புவதற்கென்று அவர்களிடத்தில் பற்றியெரிந்த வைராக்கியமானது முதல் நூற்றாண்டில் உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தை அவர்கள் பரப்பியதென்ற விளைவை ஏற்படுத்தியது (கொலோ. 1:23).*

## சுய உதவி

*ஆதிசபைகள் எதுவும் தங்களின் நிலவுகைக்குப் பணத்திற்காக மற்ற பிராந்திய சபை ஒன்றைச் சார்ந்திருந்தது என்பதற்கான ஆதாரம் எதுவும் வேதாகமத்தில் இல்லை. சபைகள் ஒன்றுக்கொன்று தேவைகளை நிறைவேற்றி நிவாரணம் அளிக்க உதவி அனுப்பி வைத்தன. ("அன்பின் உதாரகுணம்" என்ற கட்டுரையில் காணவும்.) நிதி உதவியானது பின்வரும் இரண்டு காரணங்களுக்காக அனுப்பப்பட்டது: வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மற்றும் பிரசங்கியார்களை ஆதரிக்கவுமே. இவ்விரு செயல்களிலும் உதவியானது தற்காலிகமானதாகவே இருந்தது.*

சபையொன்று வறுமையில் இருந்தாலும், அது எந்த ஒரு உதவியைப் பெற்றாலும் பெறாவிட்டாலும், சுயாதீனமுள்ளதாகவும், கர்த்தரின் நாமத்தில் இயங்குவதாகவும் இருந்தது. பவுல் தமக்குத்தாமே உதவி செய்ய வேண்டியிருந்த வேளைகளிலும் கூடத் தொடர்ந்து பிரசங்கித்தார் (அப். 18:1-4). நிதி உதவி பெறப்படாதிருந்த நிலையிலும் சபைகள் சபைகளாகவே இருந்தன, சுவிசேஷ ஊழியர்கள் அப்பொழுதும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். "நலம் பேணும் சபைகள்'' என்று எதுவும் நடபடிகளில் பதிவு செய்யப்படவில்லை மற்றும் இவ்வகையான அமைப்பில் தேவனுடைய சபை செயல்பட வேண்டுமென்று அவர் வடிவமைத்தார் என்று ஆலோசனை கூறும் போதனை எதுவும் இல்லை.

சபைக் கட்டிடங்கள் கட்டவும் பிரசங்கியார்களை ஆதரிக்கவும் ஊழியக்களங்களில் இவ்வளவு அதிகமான பணம் கொட்டப்படுவதற்கு கலாச்சாரங்கள் மற்றும் பொருளாதாரங்கள் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் காரணம் என்று அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றது. இதே வேறுபாடுகள் முதல் நூற்றாண்டில் இருந்ததில்லையா? இவை யாவும் அங்கும் இருந்தன, ஆனால் பவுலும் மற்றவர்களும் உலகத்திற்குப் பொருட்களையல்ல (goods) *சுவிசேஷத்தையே* (gospel) எடுத்துச் சென்றார்கள்.

இன்றைய நாட்களில் ஊழியக்களங்கள் பலவற்றில் சபைகள் செய்கின்றவைகள் எவைகளோ அவைகள் புதிய ஏற்பாட்டில் முன்பு செய்யப்பட்டவைகளாயிருப்பதில்லை. அமெரிக்காவின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள சபைகள் தங்கள் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கவும், தங்கள் (சபைக்) கட்டிடங்களைக் கட்டவும் தெற்கில் உள்ள சபைகளைச் சார்ந்திருப்பதென்பது பல வருடங்களாகக் காணக்கூடிய பொதுவான செயலாய் இருக்கின்றது.

இதே விஷயமானது உலகெங்கிலும் உள்ள ஊழியக் களங்களிலும் உண்மையாயிருக்கின்றது. பல பத்தாண்டுகளாக, கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டு, பிரசங்கியார்கள் ஆதரிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்; சில புதிய பிராந்திய சபைகள் சுயசார்புடையவைகளாய் ஆவதற்குச் சிறிதளவே முயற்சி எடுத்துள்ளன. மற்ற நாடுகளில் உள்ள பிரசங்கியார்கள்

அமெரிக்காவில் உள்ள (வேதாகமப்) பள்ளிகளில் பயிலுவதற்குத் தேர்வு செய்யப்பட்டு, அமெரிக்காவில் உள்ள சபைகளால் ஆதரிக்கப்படுகின்றார்கள். இந்த மனிதர்கள் பட்டம் பெற்றுப் பிரசங்கிப்பதற்காகத் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்பிய பின்னரும் கூட தொடர்ந்து உதவி வேண்டப்படுகின்றது. ஆளுகையில் உள்ளது போலவே நிதி நிலையிலும் சபைகள் சுயசார்புடையவைகளாய் இருக்க வேண்டும் என்ற விஷயம் சிந்தையில் நுழையாமல் இருக்கலாம். அமெரிக்காவிலிருந்து வரும் நிதி உதவிகளுக்கு இவ்வளவு அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதால், புதிய பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் புதிய கிறிஸ்தவர்கள் ஆகியோர், கர்த்தருடைய சபையை ஒரு "அமெரிக்காவின் சபை" என்றும் எனவே (இவ்வகை உதவிகளுக்காக) அமெரிக்காவை (எதிர்நோக்கிப்) பார்ப்பது சரியானதே என்றும் தாமாகவே நினைக்கலாம். நலம் பேணும் சிந்தை/ மனப்போக்கை உருவாக்க வேறு என்ன தேவையாயிருக்கிறது? நலம் பேணும் இந்த மனப்போக்கானது அமெரிக்க அரசின் நல்வாழ்வுத் திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது, இதே விதமான எண்ணமானது உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தைப் பரப்ப முயற்சி செய்யும் கிறிஸ்தவர்களின் சிந்தைகளிலும் இரகசியமாகப் புகுந்துள்ளது.

இந்த ஊழியக் களங்களுக்கு இனியும் அமெரிக்கப் பணம் அனுப்பப்படாதிருந்தால் என்ன நடக்கும்? விசுவாசமுள்ள ஆராதனையானது தொடர்ந்து நடக்குமா? மனிதர்கள் தொடர்ந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார்களா? எத்தனை பிராந்திய சபைகள் (ஆராதனைக்குக்) கூடுவதை விட்டுவிடும்? எத்தனை பிரசங்கியார்கள் பிரசங்கிப்பதை விட்டுவிடுவார்கள் - அல்லது ஒருவேளை தங்களுக்குப் பணம் தரக் கூடிய நாமகரணக் கூட்டங்களுக்காகப் பிரசங்கிக்கவும் சென்று விடுவார்களா? அமெரிக்கப் பிரசங்கியார்களில் பலரும்கூட சுவிசேஷத்தைப் பரப்புவதற்கான தியாக உணர்வுடன் வாழ்நாள் முழுவதும் இருதயப் பூர்வமான ஒப்புக் கொடுத்தலுடன் ஊழியம் செய்வதைப் பார்க்கிலும், வியாபார ரீதியான அணுகுமுறையை மேற்கொண்டு அதன் மூலம் "களைந்தெறியப்படுவதற்கு" இதே கேள்வியானது தூண்டுதலாயிருக்கலாம்! பவுல், சபைகளின் மூலம் உதவி பெற்றாலும்

பெறாதிருந்தாலும் பிரசங்கித்தார்; இன்றைக்கு எத்தனை பிரசங்கியார்கள் அதே விதமாகச் செய்வார்கள், அல்லது செய்து கொண்டிருக்கின்றார்கள்?

கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காகத் தியாகம் செய்யச் சித்தமாயிருந்த முன்னோடிக் கிறிஸ்தவர்களின் தலைமுறை ஒன்றினால் இன்று அமெரிக்காவில் உறுதிமிக்க சபைகள் இருக்கின்றன. ஊதியம் எதுவுமின்றி, பணச் செலவு எதுவு மின்றி மனிதர்கள் “நாள் முழுவதும் உழுது, இராமுழுவதும் பிரசங்கித்தார்கள்.'' எந்த ஒரு கட்டிடத்தையும் கட்ட முடிவதற்கு முன்பு, கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காக வீடுகளிலும், பள்ளிகளிலும், வாடகைக்கு அமர்த்திய கடைக் கட்டிடங்களிலும், மரத்தடிகளிலும் கூடத் தாழ்மையுடன் கூடி வந்தார்கள். இன்றைய நாட்களில் உள்ள அமெரிக்கக் கிறிஸ்தவர்கள், “தாங்கள் மூட்டாத நெருப்புகளினால் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றார்கள்'' - இது, பிந்திய தலைமுறைகளுக்கு ஆராதனையை வசதியானதாகவும் ஆறுதல் உள்ளதாகவும் ஆக்குவதற்காக முந்திய தலைமுறையினரின் தியாகங்கள் என்ற நெருப்பேயாகும். இப்படிப்பட்ட கடினமான உழைப்புக்கள் தான் உறுதியான முன்னோடிகளை யும் உறுதியான சபைகளையும் உண்டாக்கின. முன்னோடிகள் பாதையை அமைத்தார்கள்.

அமெரிக்க சபைகள் பல வழிகளில் உதவி செய்யலாம், ஆனால் புதிய பிராந்திய சபைகள் கடின உழைப்பு மற்றும் தியாகத்தின் மூலம் தங்களின் சொந்தமான முன்னோடித்துவ ஆவியை வளர்க்க வேண்டும். வளமான சபைகளில் உள்ள கிறிஸ்தவர்கள், பணமானது ஊழியக்களத்தில் தேவையான எல்லாவற்றையும் செய்யும் என்ற கருத்தை மிக அதிக அளவில் சார்ந்திருக்கின்றார்கள்.

ஒரு எளிய விளக்கமானது இவ்விடத்தில் உதவியாய் இருக்கலாம். புதிதாய் மணம் முடித்த தம்பதியர் தங்களின் பெற்றோர்களைப் போலவே வாழ்க்கைத் தரம் உள்ளவர் களாய் இருக்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தேவையான எல்லா நிதி உதவியையும் அவர்களின் பெற்றோர் களே கொடுத்து விட்டால் எப்படியிருக்கும்? இந்த மானிய மானது அத்தம்பதியர் வேலையே செய்யத் தேவையிராதபடி பல வருடங்கள் தொடர்ந்து கொடுக்கப்பட்டால் எப்படி

இருக்கும்? அத்தம்பதியர் எந்த அளவுக்கு பக்குவம், சுயசார்பு மற்றும் முன்னோடித்துவம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்வார்கள்? ஒன்றும் இருக்காது! இதற்கு மாறாக, பெற்றோர்களால் காட்டப்படும் இந்தப் பெருந்தன்மையானது அத்தம்பதியர் சுயசார்புள்ள குடும்பமாக ஆவதற்கான வாய்ப்புக்களை ஊனப்படுத்தி விடும். புதிதாய் மணம் முடித்தவர்களின் விஷயத்தில் இது உண்மையென்றால், ஊழியப் பணியிலும் புதிய சபைகளின் விஷயத்திலும் கூட இது உண்மையாகாதா?

## முடிவுரை

இருபத்தியோராம் நூற்றாண்டில் நாம் மாதிரி சபைகளைப் பெற்றிருக்க வேண்டுமென்றால், நடபடிகளில் காணப்படும் முன்மாதிரிகளை நாம் மதிக்க வேண்டும். தேவனுடைய ஊழியத்தைத் தேவனுடைய வழியிலேயே செய்வதற்கு நாம் திரும்ப வேண்டும். வசனரீதியானதாகவும் தேவனுடைய வசனத்தில் காணப்படும் மாதிரிக்கு உண்மையானதாகவும் உள்ள சபைகள் சுய ஆளுகை உடையதாகவும், சுயமாய்ச் செய்தியைப் பரப்புவதாகவும் மற்றும் சுய உதவியில் இயங்குவதாகவும் இருக்கும்.